DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.412/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | வசந்த் | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2023.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.1 ஆகும். பிரேதப்பரிசோதனை அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.2 ஆகும். டிஎன் 02 ஏஹச் 0697 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீட்டுச் சான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ. 3 ஆகும். டிஎன் 79 ஹச் 7428 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீட்டுச் சான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.4 ஆகும். மேற்படி விபத்தில் இறந்தவரின் சம்பளச் சான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.5 ஆகும். **(எதிர்மனுதாரர் தரப்பில் இந்த ஆவணம் குறியீடு செய்வதற்கு ஆட்சேபிக்கப்படுகிறது).** வாரிசு சான்றிதழின் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.6 ஆகும். குற்ற இறுதி அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.7 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1ம் மனுதாரர் என்னுடைய தாயார் ஆவார். நான் 2ம் மனுதாரர். எனது சகோதரி 3ம் மனுதாரர். 4ம் மனுதாரர் என்னுடைய தகப்பனாரின் அப்பா. விபத்து நடந்த 12.10.2022ம் தேதி என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட வாகனமான டிஎன் 79 ஹச் 7428 எண் கொண்ட வாகனத்தில் புளியங்குடி வம்சவிருத்தி நகர் அருகில் சென்றுகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை தேதிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். 2 வாகனங்கள் செல்லும் அளவிற்கு அகலமான சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் டிஎன் 02 ஏஹச் 0697 என்ற இன்னோவா மேக்சி கேப் வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு மேக்சிகேப் வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு இலகு ரக வாகனமும், மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் டுரிஸ்ட் டாக்ஸி ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் என்னுடைய அப்பா சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். என்னுடைய அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளது. இப்போது என்னுடைய அப்பாவின் ஓட்டுநர் உரிமம் என் கைவசம் இல்லை. 08.02.2022க்கு பின்பு என்னுடைய தகப்பனார் அவருடைய ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தின் போது என்னுடைய அப்பாவின் ஓட்டுநர் உரிமம் தவறிவிட்டது. விபத்து சமயத்தில் என்னுடைய அப்பாவிற்கு செல்லத்தகுந்த ஓட்டுநர் உரிமம்இல்லை என்றும், அவருடைய ஓட்டுநர் உரிமம் 08.02.2022வுடன் முடிந்துவிட்டது என்றும், அது தெரிந்து கொண்டு தான் நான் இவ்வாறு ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவின் சம்பள சான்றிதழில் நிகர சம்பளமாக ரூ.39,343/- என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரருக்கு செல்லக்கூடிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், விபத்து சமயத்தில் அவர் மது போதையில் வாகனத்தை ஓட்டியதாக இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால்

சரியல்ல. அந்த இறுதி அறிக்கையில் 2ம் எதிர்மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரோடு பயணம் செய்திருக்கிறார் என்றும், அவர் மது போதையில் இருந்த நபரை வாகனம் ஓட்ட அனுமதித்திருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான் பி.டெக் முடித்திருக்கிறேன். வேலை பார்க்கவில்லை. 2022ல் பி.டெக் முடித்திருக்கிறேன். என்னுடைய தகப்பனார் பணியின் போது காலமாகிவிட்டதால் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் செய்திருக்கிறேன். எனக்கு பணி நியமனம் வழங்குவதற்கு மற்ற மனுதாரர்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியிருக்கிறார்கள் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1, 2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரின் காப்பீடு விதிகளை மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏதாவது இழப்பீடு கிடைக்கவேண்டுமென்றால் 1, 2 எதிர்மனுதாரர்கள் அவர்களுடைய சொந்தப் பொறுப்பில் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. எங்கள் மனுவின் 3வது காலத்தில் என்னுடைய அப்பாவின் சம்பளச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கூறவில்லை என்றால் சரிதான். மனுவில் ரூ.1,06,998/-என்று காண்பித்திருக்கிறேன் என்றும், சம்பளச் சான்றிதழில் ரூ.39,343/-என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் என்னுடைய அப்பா விவசாயமும்செய்து அதன் மூலமாகவும் வருமானம் வந்தது. என்னுடைய தகப்பனார் விவசாயம் செய்து வருமானம் பெற்றுவந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.18 17:47:03 +0530